1996 ஆகஸ்ட் 21]

188—

நீரின் தன்மை மாறுவதைத் தடுத்தல்

***650–திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள இறால் பண்ணைகளால் நிலத்தடி நீரின் தன்மை மாறுகின்ற வாய்ப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பெரும்பாலான இறால் பண்ணைகள் உவர்ப்பு நீர் அல்லது களர் மண் கொண்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ளதால் அப்பண்ணைகளால் நிலத்தடி நீருக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

முற்பகல் 9-50

திரு. குத்தாலம் பி. கல்யாணம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறால் பண்ணைகளில் பூஞ்சாண நோய் ஏற்படுவதைத் தடுப்பதற்காக சுண்ணாம்பு, மண்ணிலே கலக்கப்படுகிறது. அதனால் பூமியின் தன்மை களர் நிலமாக மாற்றப்படுகிறது. எனவே விவசாய நிலங்களுக்கு அருகே இறால் பண்ணைகள் அமைக்க தடை விதிக்கப்படுமா? ஏராளமான இறால் பண்ணைகள் நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் இருக்கின்ற காரணத்தால், இனிமேல் அமைக்க முன்வருபவர்கள் பொதுப்பணித் துறை மற்றும் வேளாண்மைத் துறை அதிகாரிகளிடம் மறுப்பின்மைச் சான்றிதழ் —'என்.ஓ.சி.'—பெற்றுத்தான் அமைக்க வேண்டுமென்ற உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இனிமேல் இறால் பண்ணைகளே அமைக்க முடியாது. காரணம் உச்ச நீதிமன்றம் இனிமேல் இறால் பண்ணைகள் அமைக்கக்கூடாது என்று தடை விதித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கோ. மோகனதாசன்.

திரு. கோ. மோகனதாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலே ஏராளமான இறால் பண்ணைகள் நல்ல நிலத்தில் ஆரம்பிக்கப்பட்டதால் பொதுமக்கள் எல்லாம் கிளர்ந்தெழுந்து போராட்டம் நடத்தினார்கள். அதையும் மீறி அங்கே நல்ல நிலங்களில் இறால் பண்ணைகள் அமைத்ததால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அவற்றுக்கு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இயங்குகின்ற பண்ணைகளுக்கென்று சில விதிமுறைகள் உள்ளன. அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் அந்தப் பண்ணைகள் இயங்க வேண்டும். புதிதாகப் பண்ணைகள் அமைப்பதற்கு இப்போது சட்டத்தில் வழியில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. செ. இராமலிங்கம்.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உவர்நீர் மீன் வளர்ப்பு—"Brackish Water Aquaculture"—ஆராய்ச்சி மையம் கட்டுவதற்காக, அடையார் பெசன்ட் நகரில் 1989-90-ஆம் ஆண்டு நமது முதலமைச்சர் அவர்கள், ஏற்கனவே முதலமைச்சராக இருந்தபோது 10 ஏக்கர் நிலத்தை ஒதுக்கியிருந்தார்கள். இடையில் வந்தவர்கள் அந்தப் பணியைக் கிடப்பில் போட்டார்கள். அந்த ஆராய்ச்சி மையம் கட்டப்பட்டால் இப்படிப்பட்ட மண் சேதம், நிலத்தடி நீர்ச் சேதம் போன்றவற்றை ஆய்வு செய்ய வசதியாக இருக்கும். எனவே ``Brackish Water Aquaculture" ஆராய்ச்சி மையம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் கருத்து அரசின் கவனத்தில் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பி.என். சுப்பிரமணி.

திரு. பி.என். சுப்பிரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆற்காடு தொகுதி பாலாற்றுப் படுகையிலே 'பாரி கம்பெனி' கழிவுநீர் ஆற்றில் கலப்பதால் நீரின் தன்மை கெடுகிறது. எனவே அந்த 'பாரி கம்பெனி' கழிவுநீர் ஆற்றில் கலப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

1996 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆறுகளிலும், நீர் நிலைகளிலும் தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுநீர் கலப்பது என்பது பொதுவாக எல்லா இடங்களிலும் இருக்கிற பிரச்சினையாகும். இது ஒட்டுமொத்தமாகத் தடுக்கப்பட வேண்டும். கிருஷ்ணகிரியில் உள்ள டேமை எடுத்துக் கொண்டால் அதற்கு மேல்பகுதியில் ஒரு தொழிற்சாலை வெளியேற்றும் கழிவுநீர் வருகிறது. அதேபோல் காவிரி வட்டத்திலே இருக்கின்ற 'சேஷசாயி பேப்பர் மில்ஸ்' மற்றும் திருச்சிவரை உள்ள பல தொழிற்சாலைகளின் கழிவுநீர் ஆற்றில்தான் கலக்கப்படுகிறது. அதன் காரணமாக நீர் அசுத்தமாகிறது. இது குறித்து ஒட்டுமொத்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இருந்தாலும், கூடியவரையில் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 189, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

189—

நந்தன் கால்வாய்த் திட்டம்

***880—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நந்தன் கால்வாய்த் திட்டம் மீண்டும் கொண்டு வரப்படுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

உலக வங்கி உதவியுடன் நடைபெற்றுவரும் நீர் வள ஆதார அமைப்பின் கீழ் நந்தன் கால்வாய்த் திட்ட பாசன முறை மேம்பாடு செய்வதற்காக ரூ. 65.20 லட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

முற்பகல் 9-55

டாக்டர் ஆ. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேல்மலையனூர், செஞ்சி, முகையூர் ஆகிய மூன்று தொகுதிகளுக்கு உட்பட்ட 36 ஏரிகள் நீர் ஆதாரம் பெறுகின்ற வகையில், 1976-ஆம் ஆண்டு நம்முடைய தமிழ் இனத் தலைவர், முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், குறுஞ்சலாறு ஆற்றின் குறுக்கே